*65*

# யூதர்களின் விசாரணை மற்றும் பேதுருவின் மறுதலிப்புகள்

## (26:57-75)

*ஒலிவ மலையில் இயேசு கைது செய்யப்பட்ட பின்பு, பிரதான ஆசாரியரான காய்பா மற்றும் சனெதெரீன் சங்கத்தாரிடம் அவர் கூட்டிச் செல்லப்பட்டார், அங்கு அவர் விசாரிக்கப்பட்டார் (26:57-68). பேதுரு தூரத்தில் இயேசுவைப் பின்பற்றி வந்து, விசாரணையின் விளைவைக் காண நம்பிக்கை கொண்டிருந்தார். இயேசுவுடனான தமது இணைவைப்பற்றி கேள்விகளைப் பேதுரு எதிர்கொண்ட போது, அவர் மும்முறை கர்த்தரை மறுதலித்தார் (26:69-75).*

### *யூதர்களின் விசாரணை (26:57-68)*

***57**இயேசுவைப் பிடித்தவர்கள் அவரைப் பிரதான ஆசாரியனாகிய காய்பாவினிடத்திற்குக் கொண்டுபோனார்கள்; அங்கே வேதபாரகரும் மூப்பரும் கூடிவந்திருந்தார்கள்.*

***58**பேதுரு, தூரத்திலே அவருக்குப் பின்சென்று, பிரதான ஆசாரியனுடைய அரமனைவரைக்கும் வந்து, உள்ளே பிரவேசித்து, முடிவைப் பார்க்கும்படி சேவகரோடே உட்கார்ந்தான்.*

***59**பிரதான ஆசாரியரும் மூப்பரும் சங்கத்தார் யாவரும் இயேசுவைக் கொலை செய்யும்படி அவருக்கு விரோதமாய்ப் பொய்ச்சாட்சி தேடினார்கள்;*

***60**ஒருவரும் அகப்படவில்லை; அநேகர் வந்து பொய்ச்சாட்சி சொல்லியும் அவர்கள் சாட்சி ஒவ்வவில்லை; கடைசியிலே இரண்டு பொய்ச்சாட்சிகள் வந்து:*

***61**தேவனுடைய ஆலயத்தை இடித்துப்போடவும், மூன்றுநாளைக்குள்ளே அதைக் கட்டவும் என்னாலே ஆகும் என்று இவன் சொன்னான் என்றார்கள்.*

***62**அப்பொழுது, பிரதான ஆசாரியன் எழுந்திருந்து, அவரை நோக்கி: இவர்கள் உனக்கு விரோதமாய்ச் சாட்சிசொல்லுகிறதைக் குறித்து நீ ஒன்றும் சொல்லுகிறதில்லையா என்றான்.*

***63**இயேசுவோ பேசாமலிருந்தார். அப்பொழுது, பிரதான ஆசாரியன் அவரை நோக்கி: நீ தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா? அதை எங்களுக்குச் சொல்லும்படி ஜீவனுள்ள தேவன்பேரில் உன்னை ஆணையிட்டுக் கேட்கிறேன் என்றான்.*

***64**அதற்கு இயேசு; நீர் சொன்னபடிதான்; அன்றியும், மனுஷகுமாரன் சர்வவல்லவருடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதையும்*

***வானத்தின் மேகங்கள் மேல் வருவதையும் இதுமுதல் காண்பீர்களென்று, உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.***

***65அப்பொழுது பிரதான ஆசாரியன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு: இவன் தேவதூஷணம் சொன்னான்; இனிச்சாட்சிகள் நமக்கு வேண்டியதென்ன? இதோ, இவன் தூஷணத்தை இப்பொழுது கேட்டீர்களே.***

***66உங்களுக்கு என்னமாய்த் தோன்றுகிறது என்று கேட்டான். அதற்கு அவர்கள்: மரணத்துக்குப் பாத்திரனாயிருக்கிறான் என்றார்கள்.***

***67அப்பொழுது, அவருடைய முகத்தில் துப்பி, அவரைக் குட்டினார்கள்; சிலர் அவரைக் கன்னத்தில் அறைந்து:***

***68கிறிஸ்துவே, உம்மை அடித்தவன் யார்? அதை ஞானதிருஷ்டியினால் எங்களுக்குச் சொல்லும் என்றார்கள்.***

***வசனம் 57.*** *யோவான் 18:12-24 ன்படி, இயேசு முதலில் முன்னாள் பிரதான ஆசாரியரான அன்னாவிடம் கூட்டிச் செல்லப்பட்டார்.[1] இது மக்கள் மீது அவர் கொண்டிருந்த செல்வாக்கிற்கு மரியாதை செலுத்தும் வகையில் செய்யப்பட்டது. கி.பி. 15ல் ரோம ஆளுநரான வலேரியுஸ் கிரேட்டஸ் என்பவரால் அன்னா பதவியில் இருந்து நீக்கப்பட்டிருந்தாலும், இன்னமும் பல யூதர்கள், அவரையே பிரதான ஆசாரியராகக் கருதினர் (26:3ன் மீதான விளக்கங்களைக் காணவும்). இயேசுவின் சீஷர்கள் மற்றும் அவரது போதகம் ஆகியவற்றைப் பற்றி அவரிடத்தில் விசாரித்த அன்னா, பின்பு அவரைத் தமது மருமகனான காய்பாவிடம் அனுப்பிவைத்தார்.[2]*

*இந்த விபரங்களை மத்தேயு தமது சுவிசேஷத்தில் உள்ளடக்கவில்லை, ஆனால்* ***இயேசுவைப் பிடித்தவர்கள் அவரைப் பிரதான ஆசாரியனாகிய காய்பாவினிடத்திற்குக் கொண்டுபோனார்கள்; அங்கே வேதபாரகரும் மூப்பரும் கூடிவந்திருந்தார்கள் என்று அறிவித்தார்.*** *இயேசுவைக் கைதுசெய்யும் விஷயம் நிச்சயமாக நடக்கும் என்பதை அறிந்த சனெதெரீன் சங்கத்தின் உறுப்பினர்களில் சிலர், காய்பாவின் இல்லத்தில் கூடிவந்திருந்தனர். காய்பா இயேசுவை விசாரணை செய்து, முழுமையும் வசதிப்படும்போது சனெதெரீன் சங்கத்தார் முன்னிலையில் தாம் கூறவேண்டியது என்ன என்பதைத் தமது சிந்தைக்குள் கணக்கிட்டு வைத்தார் என்பதில் சந்தேகம் இல்லை. இயேசுவுடனான தமது பேட்டியைத் தொடர்ந்து அவரை சனெதெரீன் சங்கத்தார் முன்னிலைக்கு அனுப்பிவைத்தார்.*

*மிஷ்னாவின்படி, கள்ளத்தீர்க்கதரிசி என்று கருதப்படும் ஒரு மனிதரை விசாரணை செய்யும்போது, முழு சங்கத்தார்களும் இருக்க வேண்டும்.[3] இருப்பினும் இந்த சம்பவத்தில் அந்த விதி பின்பற்றப்படவில்லை. அரிமத்தியாவூர் யோசேப்பு ஆலோசனை சங்கத்தின் உறுப்பினராக இருந்தார் (மாற்கு 15:43; லூக்கா 23:50). நிக்கொதேமுவும் அவ்வாறு இருந்திருக்கச் சாத்தியக்கூறு உள்ளது (யோவான் 3:1; 7:50, 51; 19:38, 39). இவ்விரு மனிதர்களும் அந்த இரவில் அங்கிருக்கவில்லை என்பது உறுதி (காண்க லூக்கா 23:51, 52).*

*ஆக்கினைத்தீர்ப்பின் கடைசி வாக்கெடுப்பிற்காக, அடுத்த நாள் காலைவேளையில் ஆலோசனை சங்கத்தார் யாவர் முன்னிலையிலும் இயேசு கொண்டுவரப்பட்டார் (27:1; மாற்கு 15:1; லூக்கா 22:66). ஆலோசனை*

*சங்கத்தில் எழுபத்தியோரு உறுப்பினர்கள் இருந்தனர்: முறைப்படியான எழுபது உறுப்பினர்களும், தலைமை வகிக்கும் பிரதான நியாயாதிபதியாகப் பிரதான ஆசாரியரும். மோசே தமக்கு உதவி செய்வதற்கு எழுபது நியாயாதிபதிகளை நியமிக்கும்படி அவருக்குத் தேவன் கூறிய அடிப்படையில் இந்த எண்ணிக்கை அமைந்தது (எண்ணாகமம் 11:16).[4] அவர்கள் ஒவ்வொருவரும் மற்ற யாவரையும் காணும் வகையில் அரைவட்ட வடிவில் அமர்ந்தனர். இரண்டு எழுத்தாளர்கள் குழுவை நோக்கி அமர்ந்திருப்பார்கள்; அவர்களில் ஒருவர் குற்றம் சாட்டப்பட்டவருக்கு ஆதரவான விவாதங்களைப் பதிவு செய்வார், இன்னொருவர் குற்றச்சாச்சாட்டிற்கான விவாதங்களைப் பதிவு செய்வார். ஒவ்வொரு உறுப்பினரும் தனித்தனியே தீர்ப்பை வழங்குவர்.[5]*

*தங்கள் சட்டங்களைப் பின்பற்றுவதில் வழக்கமாக மிகவும் கவனமாயிருந்த இந்த யூதர்கள், இயேசுவைக் குற்றப்படுத்துவதற்காக அவற்றை முற்றிலுமாகப் புறக்கணித்தனர். (1) இரவு வேளையில் இயேசுவைப் பிடித்து, சூரிய உதயத்திற்கு முன்னர் அவரைப் பிரதான ஆசாரியரிடம் கூட்டிக்கொண்டு வந்ததால் அவர்கள் பல்வேறு நடைமுறைகளைப் புறக்கணித்தனர்.[6] (2) தேவாலயக் கட்டிட வளாகத்தில் இருந்த கற்தளம் பாவப்பட்ட அறையில் சட்ட செயல்முறைகள் நடத்தப்பட வேண்டி இருந்தது[7] - இது நிச்சயமாகப் பிரதான ஆசாரியரின் வீட்டில் அல்ல. (3) மரண தண்டனைக்குரிய குற்றங்கள் ஓய்வுநாளின் அல்லது ஒரு பண்டிகையின்போதோ மாலை வேளையில் விசாரிக்கப்பட முடியாது.[8] (4) சாட்சியங்களைத் தனித்தனியே கேள்விகேட்டு, அவர்களின் சாட்சியம் ஒத்துப்போவதை நிச்சயப்படுத்திக்கொள்வதை அவர்கள் புறக்கணித்தனர்.[9] (5) சாதாரணமாக, மரண தண்டனை ஒன்று முடிவு செய்யப்பட்டால், அது அலுவலகரீதியாக அறிவிக்கப்படுவதற்கு முன்னர் ஒரு முழு இரவு கடந்து செல்ல வேண்டியதாக இருந்தது.[10]*

***வசனம் 58. பேதுரு, தூரத்தில் (இயேசுவுக்கு)ப் பின்சென்று, பிரதான ஆசாரியனுடைய அரமனைவரைக்கும்**[11] வந்து அங்கே காத்திருந்தார். கெத்செமனேயில் நடந்திருந்த நிகழ்வுகளினால் அவர் எவ்வளவு குழப்பம் அடைந்திருக்க வேண்டும்! 26:56ம் வசனம், "சீஷர்களெல்லாரும் அவரைவிட்டு ஓடிப்போனார்கள்" என்று கூறுவதால், பேதுருவும் ஓடிப்போனார் என்று நாம் யூகிக்கிறோம். இருந்த போதிலும் அவர், பாதுகாப்பான தூரத்தில் அந்தக் கும்பலைப் பின்தொடரத் திரும்பி வந்து, அறியப்படாதவராயிருக்க முயற்சிசெய்தார்.*

*முற்றத்தில் இருக்கையில் பேதுரு, **ஊழியக்காரர்களுடன் அமர்ந்து** குளிர் காய்ந்து கொண்டு (யோவான் 18:18), இயேசுவை விசாரணை செய்வதால் ஏற்படும் **முடிவைக் காணக்** காத்திருந்தார். "ஊழியர்கள்" என்பதற்குப் பதிலாக மற்ற பதிப்புகளில் "சேவகர்கள்"* (NIV; NRSV) *அல்லது "உதவியாளர்கள்" என்றுள்ளது* (NEB; NJB). *Hupēretēs என்ற கிரேக்க வார்த்தை பொதுவாக, இன்னொருவரின் அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டவராக இருந்து அவருக்கு உதவிசெய்யும் ஒருவரைக் குறிக்கிறது.*

*இந்த ஊர்வலக்கூட்டத்தைப் பின்பற்றிய இன்னொரு அப்போஸ்தலர் யோவான் என்று நம்பப்படுகின்றார், இவர் முதலில் முற்றத்திற்குள் பிரவேசித்திருந்தார். இவர் வாயிற்காவலரிடம் பேசினார், பின்பு அந்த வாயிற்காவலர் பேதுருவை உள்ளே நுழைய அனுமதித்தார் (யோவான்*

*18:15, 16).* பேதுருவும் யோவானும் இந்த நிகழ்ச்சிகளைக் கண்ணால் கண்ட சாட்சிகளாக இருந்ததால், அவர்கள் இந்தத் தகவல்களை மத்தேயுவுடனும் மற்ற சீஷர்களுடனும் பகிர்ந்து கொண்டிருக்க வாய்ப்புள்ளது.

**வசனம் 59.** இயேசு எந்தக் குற்றமும் செய்திருக்கவில்லை என்பதால், **பிரதான ஆசாரியரும்** சனதெரீன் சங்கத்தின் மற்ற உறுப்பினர்களும் அவருக்கு **விரோதமாய்ப் பொய்ச்சாட்சி** கூற, நேர்மையற்ற மனிதர்களைக் கண்டறிய வேண்டியிருந்தது. மரணதண்டனையை விதித்துச் செயல்படுத்த அவர்களுக்கு உரிமை இல்லாதிருந்ததால் *(1:19; 10:18; 12:14* ஆகிய வசனங்கள் மீதான விளக்கங்களைக் காணவும்),[12] இயேசு **மரணத்திற்குப்** பாத்திரர் என்று ரோம ஆளுநரை நம்பி இணங்கச் செய்யும் குற்றச்சாட்டை அவர்கள் கண்டறிய வேண்டும். **சங்கத்தார் யாவரும்** என்ற சொற்றொடரை இவ்விடத்தில் நேர்ப்பொருளில் எடுத்துக்கொள்ளக் கூடாது. இயேசுவுக்கு விரோதமாயிருந்த ஒவ்வொரு உறுப்பினரும், அந்த இரவில் ஒன்றுகூடினர் என்று மத்தேயு கூறியிருக்கலாம்.[13]

**வசனங்கள் 60, 61.** முதலில் **அநேகர் வந்து பொய்ச்சாட்சி கூறினர்,** ஆனால் அவர்களின் சாட்சியங்கள் ஒத்துப்போகவில்லை (மாற்கு *14:55, 56).* நியாயப்பிரமாணத்தின்படி, இரண்டு அல்லது மூன்று சாட்சிகள் சீராகச் சாட்சியளிக்காமல், ஒரு மனிதருக்கு மரணதண்டனை விதிக்க இயலாது (எண்ணாகமம் *35:30;* உபாகமம் *17:6; 19:15).* சற்று நேரத்திற்குப் பின்பு, **இரண்டு** சாட்சிகள் வந்து, **தேவனுடைய ஆலயத்தை இடித்துப்போடவும், மூன்றுநாளைக்குள்ளே அதைக் கட்டவும் என்னாலே ஆகும்** என்று இயேசு கூறியதாக மேற்கோள் காண்பித்தனர் (காண்க *27:40).* இருந்தபோதிலும், இட்டுக்கட்டப்பட்ட அவர்களின் கதைகளும் சீர்பொருத்தமற்று இருந்தன (மாற்கு *14:59).*

தேவாலயத்திற்கு விரோதமாகப் பேசுதல் என்பது யூதர்களால் மிகமுனைப்பான குற்றமாகக் கருதப்பட்டது (நடபடிகள் *6:12-14).* தேவாலயம் விழத்தள்ளப்படும் என்று தனிப்பட்ட வகையில் இயேசு முன்னுரைத்திருந்தார் *(24:1, 2).* அவர் அதை மூன்று நாட்களுக்குள் மீளக்கட்டுவதாக ஒருக்காலும் கூறவில்லை. "இந்த ஆலயத்தை" *யூதர்கள்* இடித்துப் போடுவார்கள், மற்றும் மூன்று நாளைக்குள் இதை கட்டி எழுப்புவார் என்றே அவர் கூறினார் (யோவான் *2:19)* இருப்பினும் அவர் தமது சரீரத்தையே தேவாலயம் என்று குறிப்பிட்டார்; அவர் தமது மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் மறைமுகமாகக் குறிப்பிட்டார் (யோவான் *2:21, 22).*

**வசனங்கள் 62, 63. பிரதான ஆசாரியர் எழுந்து நின்று, இயேசு** தமது தற்காப்பு வாதமாகப் **பதில் கூறும்படி** அவரிடத்தில் சொன்னபோது, முதலில் இயேசு **பேசாமலிருந்தார்.** இது ஏசாயா *53:7*ன் நிறைவேற்றமாக இருந்தது:

> *அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார்,*
> *ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை;*
> *அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப் போலவும்,*
> *தன்னை மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும்,*

*அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்.*

*இதே போன்றே மொழிநடை சங்கீதம் 38:12-14 வசனப் பகுதியிலும் காணப்படுகிறது.*

*இயேசுவின் அமைதி, சனதெரீன் சங்கத்தில் பெரும் செயல்தாக்கத்தை ஏற்படுத்திற்று என்பது தெளிவு. சாதாரணமாக, குற்றம் சாட்டப்பட்டவர், ஒவ்வொரு குற்றச்சாட்டிற்கும் பதில் அளிக்கவும் தமது குற்றமற்ற தன்மையைக் கூறி விடுவிக்கும்படி வேண்டுகோள் விடுக்கவும் முயற்சி செய்வர், இருப்பினும் இயேசு ஒன்றும் கூறவில்லை.*[14] *அவர் சிலுவைக்குச் செல்லத் தம்மை ஒப்புவித்திருந்தார், எனவே அவர் தம்மைத் தற்காத்துக் கொள்ளத் தேவையில்லாதிருந்தார்.*

*இயேசுவின் அமைதிக்குப் பதிலுரையாக,* **பிரதான ஆசாரியன் அவரை நோக்கி: நீ தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா? அதை எங்களுக்குச் சொல்லும்படி ஜீவனுள்ள தேவன்பேரில் உன்னை ஆணையிட்டுக் கேட்கிறேன்** *என்று கூறினார். நியாயப்பிரமாணத்தின்படி, சாட்சிகூறும் ஒருவரைப் பேசும்படி வற்புறுத்த நியாயாதிபதி உரிமை கொண்டிருந்தார் (லேவியராகமம் 5:1)*[15] *"ஆணையிட்டு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள* (*exorkizō*) *கிரேக்க வார்த்தை "ஒருவர் சத்தியம் செய்யக் காரணம் ஆகுதல்" அல்லது "ஆணையின்கீழ் கட்டளையிடுதல்" என்று அர்த்தப்படுகிறது.* NRSV *வேதாகமத்தில் "ஜீவனுள்ள தேவன் முன்னிலையில் உன்னை நான் ஒரு ஆணையின்கீழ் வைக்கிறேன்" என்றுள்ளது.*

*காய்பா, இயேசுவுக்கு எதிராக மரணதண்டனை வழங்க ஆதாரங்களை நிலைநாட்ட முயற்சி செய்துகொண்டிருந்தார். அவர் (இயேசு) யூதர்களின் இராஜவான "கிறிஸ்து"வாக இருப்பதாக உரிமை கோரினால், இது ரோம அரசாங்கத்திற்கு எதிரான சூழ்ச்சி என்ற வகையில் விளக்கம் தரப்படும் (காண்க நடபடிகள் 17:7). அவர் "தேவனுடைய குமாரனாக" இருப்பதாக உரிமை கோரினால், இது தேவதூஷணம் என்று யூதர்களால் காணப்படும்.*

*பழைய ஏற்பாட்டில், இஸ்ரவேலின் இராஜா "தேவனுடைய தத்துப் பிள்ளை" என்ற வகையில் கண்ணோக்கப்பட்டார் (சங்கீதம் 2:12). அவரது முடிசூட்டுதலின் நாளில் அவர், பூமியில் தேவனுடைய பிரதிநிதியானார். இராஜாதி இராஜாவாகிய இயேசுவுக்குப் பயன்படுத்தப்படும்போது, "தேவ குமாரன்" என்ற இந்தத் சொற்றொடர் அவரது தெய்வீகத்தை மறைமுகமாக உணர்த்துகிறது (3:17; 4:3, 6; 8:29; 14:33; 16:16; 27:40, 43, 54).*

***வசனம் 64.*** *பிரதான ஆசாரியரின் கேள்விக்கு இயேசு பதில் கூறத் தவறியிருந்தால், அது அவர் கிறிஸ்து அல்ல என்று வாய்மொழியின்றியே ஒப்புக்கொள்ளுதலாக விளக்கப்படுத்தப் பட்டிருக்கும். இருப்பினும் அவர் உண்மைநிறைந்த வகையில் பதில் அளித்தபோது, அவரது வார்த்தைகள் அவருக்கு விரோதமாகப் பயன்படுத்தப்படும் என்று அவர் அறிந்திருந்தார்.*

*பிரதான ஆசாரியருக்கு* **இயேசு நீர் சொன்னபடிதான்** *என்று பதில் அளித்தார். இது, "ஆம்" என்று கூறுவதற்கு முறைமுகமான வழியாக இருந்தது, இது கேள்வி கேட்பவர் மீது ஒரு வலியுறுத்தத்தை வைக்கிறது. இந்த அதி காரத்தில் முன்பு, இயேசு இதே வகையில் யூதாஸுக்குப் பதில் அளித்திருந்தார் (26:25).*

*பின்பு இயேசு,* ***அன்றியும், மனுஷகுமாரன் சர்வவல்லவருடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதையும் வானத்தின் மேகங்கள் மேல் வருவதையும் இதுமுதல் காண்பீர்களென்று, உங்களுக்குச் சொல்லுகிறேன்*** *என்று கூறியதன் மூலம், தாம் அர்த்தப்படுத்தியதைத் தெளிவாக்கினார்.*[16] *மக்களால் எதிர்பார்க்கப்பட்ட இராணுவரீதியான மேசியாவாகத் தம்மை அடையாளப்படுத்திக் கொள்வதற்குப் பதிலாக, இயேசு தம்மை எல்லாருக்கும் ஆண்டவராகவும் நியாயாதிபதியாகவும் சித்தரித்தார். அவரது அப்போதைய சூழ்நிலைக்கு ஏற்புடையதாகக் காணப்படா விட்டாலும் அவர் இந்த அறிக்கையைத் தைரியமாக ஏற்படுத்தினார்.*[17]

*இயேசுவின் விரிப்பு, தானியேல் 7:13, 14 மற்றும் சங்கீதம் 110:1 ஆகிய வசனப் பகுதிகளை ஒன்றிணைத்துக் கூறப்பட்டதாக உள்ளது. தானியேல் 7ல் மனுஷ குமாரன் வானத்து மேகங்களுடனே வந்து, அழிவில்லாத இராஜ்யத்தைப் பெற்றுக்கொள்வதற்காக (காண்க 24:30), நீண்ட ஆயுசுள்ளவர் (பிதாவாகிய தேவன்) இருக்கும் இடத்தை அணுகினார். மேசியாத்துவ சங்கீதமாகிய சங்கீதம் 110ல், கர்த்தர் தேவனுடைய வலது பாரிசத்தில் முடிசூட்டப்பட்டு, மக்களினங்கள் மீது ஆளுகை செலுத்துகிறார் (காண்க 22:42-45). இங்கு இயேசு "வல்லமை" என்ற சொற்றொடரை, "கி.மு. இரண்டாம் நூற்றாண்டிற்குப் பின்னர் யூதர்கள் உச்சரிக்கத் தயங்கிய தேவனுடைய நாமத்தைச் சுற்றிச்சூழும் கருப்பொருள்" என்ற வகையில் பயன்படுத்தினார்.*[18]

***வசனங்கள் 65, 66.*** *செயல்விளைவில் இயேசு, தமது விரோதிகளுக்கு சத்தியத்தை எடுத்துரைத்ததன் மூலம், தம்மை தாமே, குற்றச்சாட்டில் சிக்கவைத்தார். அவரது சாட்சியத்திற்குப் பதில் செயலாக,* ***பிரதான ஆசாரியன் தான் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு: இவன் தேவதூஷணம் சொன்னான் என்று கூறினார்.*** *பொதுவாகக் கூறினால், பிரதான ஆசாரியர் தமது வஸ்திரங்களைக் கிழித்துக்கொள்ளக் கூடாது என்று தேவன் அறிவுறுத்தி இருந்தார் (லேவியராகமம் 10:6; 21:10). இருந்தபோதிலும், யூதர்களின் பாரம்பரியத்தின்படி, தேவதூஷணத்தை எதிர்கொள்ளும்போது நியாயாதிபதிகள் இதைச் செய்ய வேண்டியிருந்தது.*[19]

*இனி* ***சாட்சிகள் தேவையில்லை*** *என்று காய்பா கண்டார். இயேசு தம்மை தேவகுமாரன் என்று ஒப்புக்கொண்டதன் மூலம்* ***தேவதூஷணம்*** *கூறியதாகக் காய்பா அறிவித்தார். கூடியிருந்த சங்க உறுப்பினர்களின் கருத்தைக் காய்பா கேட்டபோது, அவர்கள்:* ***மரணத்துக்குப் பாத்திரனாயிருக்கிறான்*** *என்றார்கள். தேவனுடைய நாமத்திற்கு எதிராகத் தேவதூஷணம் கூறப்படும் விஷயத்தில் மரண தண்டனை அளித்தல் என்பது தேவனால் பரிந்துரைக்கப்பட்டிருந்தது (லேவியராகமம் 24:10-16).*

*தேவனுடைய நாமத்தைப் பற்றி ஒருவர் பேசியிருந்தால் அன்றி, அந்த நபர்மீது அலுவலக ரீதியாக தேவதூஷணக் குற்றம் சாட்டப்பட இயலாது;*[20] *ஆகையால், மேசியாவாக இருத்தல் என்று உரிமைகோருதல் (அது இயேசுவைத் தவிர வேறு யாராவது ஏற்படுத்திய தவறான உரிமைகோருதலாக இருந்தாலும்) மரண தண்டனை அளிக்கப்படக் கூடியதல்ல. இருப்பினும் யூதர்கள் பிற்பாடு, "எங்களுக்கு ஒரு நியாயப்பிரமாணமுண்டு, இவன் தன்னைத் தேவனுடைய குமாரனென்று சொன்னபடியினால், அந்த நியாயப்பிரமாணத்தின்படி, இவன் சாகவேண்டும்" என்று கூறினர் (யோவான் 19:7).*

*__வசனங்கள் 67, 68.__ இயேசு அன்னாவின் முன்பாக வந்து நின்றபோது, அவர் பிரதான ஆசாரியரைக் கேள்வி கேட்கத் துணிந்ததால், அலுவலர்களில் ஒருவர் அவரைக் கன்னத்தில் அறைந்தார் (யோவான் 18:21, 22). இயேசு காய்பாவின் முன்பாக வந்து நின்றபோது, தவறாக நடத்தப்படுதலும் வாதையும் திரும்பச் செய்யப்பட்டது.*

*சனதெரீன் சங்கத்தார் தங்கள் செயல்பாடுகளினால், இயேசுவையும் அவரது உரிமைகோருதல்களையும் மறுத்தனர். சிலர் __அவருடைய முகத்தில் துப்பினர்,__ இது யூதர் ஒருவருக்குச் செய்யப்படக் கூடிய மிக அதிகபட்ச அவமானமாயிருந்தது. மேலும் அவர்கள், __அவரைக் குட்டினார்கள்;__ சிலர் __அவரைக் கன்னத்தில் அறைந்தார்கள்.__ மாற்கு 14:65ம் வசனம், இந்த மனிதர்கள் "வேலைக்காரர்களாக" இருந்தனர் என்று கூறுகிறது.*

*அவர்கள் இயேசுவை அறைகையில், __கிறிஸ்துவே, உம்மை அடித்தவன் யார்? அதை ஞானதிருஷ்டியினால் எங்களுக்குச் சொல்லும்__ என்று கூறினர். மாற்கு மற்றும் லூக்கா ஆகிய இருவருமே, இயேசு இந்த வேளையில் கண்கள் கட்டப்பட்டிருந்தார் என்று சுட்டிக்காண்பிக்கின்றனர் (மாற்கு 14:65; லூக்கா 22:64), இது காட்சியைச் சுலபமாகப் புரியவைக்கக் கூடிய விபரமாக உள்ளது. இயேசு தீர்க்கதரிசியாக இருந்தார் என்ற கருத்தை, மனிதரின் கண்ணைக்கட்டி விளையாடுதலின் பிறழ்வுச் செய்கையினால், வேலைக்காரர்கள் எள்ளிநகையாடினர். அவர் உண்மையிலேயே தீர்க்கதரிசியாக இருந்தால், தம்மை அடித்த நபர் யாரென்று பாராமலே அந்த நபரைப் பெயர்கூறி அழைத்து அடையாளப்படுத்தக் கூடியவராக இருப்பார்.*

## *பேதுருவின் மறுதலிப்புகள் (26:69-75)*

***[69]அத்தருணத்தில் பேதுரு வெளியே வந்து அரமனை முற்றத்தில் உட்கார்ந்திருந்தான். அப்பொழுது, வேலைக்காரி ஒருத்தி அவனிடத்தில் வந்து: நீயும் கலிலேயனாகிய இயேசுவோடேகூட இருந்தாய் என்றாள்.***

***[70]அதற்கு அவன்: நீ சொல்லுகிறது எனக்குத் தெரியாது என்று, எல்லாருக்கும் முன்பாக மறுதலித்தான்.***

***[71]அவன், வாசல் மண்டபத்திற்குப் போனபொழுது வேறொருத்தி அவனைக் கண்டு: இவனும் நசரேயனாகிய இயேசுவோடேகூட இருந்தான் என்று அங்கே இருந்தவர்களுக்குச் சொன்னாள்.***

***[72]அவனோ: அந்த மனுஷனை நான் அறியேன் என்று ஆணையிட்டு, மறுபடியும் மறுதலித்தான்.***

***[73]சற்றுநேரத்துக்குப்பின்பு அங்கே நின்றவர்கள் பேதுருவினிடத்தில் வந்து: மெய்யாகவே நீயும் அவர்களில் ஒருவன்; உன் பேச்சு உன்னை வெளிப்படுத்துகிறது என்றார்கள்.***

***[74]அப்பொழுது அவன்: அந்த மனுஷனை அறியேன் என்று சொல்லி, சபிக்கவும் சத்தியம்பண்ணவும் தொடங்கினான். உடனே சேவல் கூவிற்று.***

***[75]அப்பொழுது பேதுரு: சேவல் கூவுகிறதற்குமுன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று இயேசு தன்னிடத்தில் சொன்ன வசனத்தை நினைத்துக்கொண்டு, வெளியே போய், மனங்கசந்து அழுதான்.***

*தீர்க்கதரிசனம் உரைக்க இயேசு கொண்டிருந்த வல்லமையானது புறக்கணிக்கப்பட்டு ஏளனம் செய்யப்பட்ட காட்சி உள்ள 68ம் வசனத்திற்குப் பின்பு மத்தேயு, இயேசுவின் தீர்க்கதரிசனம் நிறைவேற்றப்பட்ட ஒரு காட்சியை உள்ளடக்கினார்.*[21] *இயேசுவினிமித்தம் எல்லாரும் இடறல் அடைந்தாலும், தாம் இடறல் அடைவதில்லை, தாம் இயேசுவை மறுதலிக்கப்போவதில்லை என்று பேதுரு கூறியிருந்தார் (மத்தேயு 26:33, 35). இருப்பினும் அவருக்குக் கர்த்தர், சேவல் இருமுறை கூவுமுன் தம்மை அவர் மும்முறை மறுதலிப்பார் என்று கூறியிருந்தார் (26:34).*[22] *பேதுரு தமது வார்த்தையைக் காத்துக்கொள்ள மனவிருப்பமாயிருந்தார். கெத்செமனேயில் அவர், தமது கர்த்தருக்காக மரணம் வரை போரிட மனவிருப்பம் கொண்டிருந்தார் (26:51). இயேசு பேருதுவைத் தமது எதிர்ப்பற்ற தன்மையுடன் கடிந்து கொண்ட விஷயமானது அப்போஸ்தலரின் முந்திய ஒப்புக்கொடுத்தலுக்கு ஒரு பெரிய அடியைக் கொடுத்திருக்க வேண்டும் (26:52-54).*

***வசனம் 69.*** *அத்தருணத்தில்* ***பேதுரு வெளியே வந்து அரமனை முற்றத்தில் உட்கார்ந்திருந்து*** *மற்றும் விரோதிகளின் "நெருப்பண்டையிலே குளிர் காய்ந்துகொண்டிருக்கையில்" (மாற்கு 14:54), அவர் இயேசுவின் சீஷர்களில் ஒருவர் என்பதை* ***வேலைக்காரி ஒருத்தி*** *அடையாளம் கண்டாள். அவள்,* ***நீயும் கலிலேயனாகிய இயேசுவோடேகூட இருந்தாய்*** *என்று அறிவித்தாள். இயேசு, கலிலேயாவில் வளர்க்கப் பட்டிருந்ததாலும் அவரது ஊழியத்தின் பெரும்பான்மைப் பகுதியில் அவர் அங்கே ஈடுபட்டு இருந்ததாலும், எருசலேமில் இருந்தவர்களால் அவர் "கலிலேயர்" என்று குறிப்பிடப்பட்டார்.*

***வசனம் 70.*** *பேதுரு* ***நீ சொல்லுகிறது எனக்குத் தெரியாது*** *என்று கூறி, தாம் இயேசுவுடன் கொண்டிருந்த இணைவை* ***மறுதலித்தார்.*** *ஒருவேளை அவர் பயத்தினால் வாசல் மண்டபத்திற்குப் போனார் (மாற்கு 14:68).*[23]

***வசனம் 71.*** *அதிகம் மறைவான இடத்தைக் கண்டறியப் பேதுரு செய்த முயற்சி பின்தாக்கப் பட்டது.* ***அவர் வாசல் மண்டபத்திற்குப் போனபொழுது வேறொருத்தி*** *அவனைக் கண்டாள். அவள்* ***இவனும் நசரேயனாகிய இயேசுவோடேகூட இருந்தான்*** *என்று வெளிப்படையாக எல்லாருக்கும் அறிவித்தாள். இம்முறை இயேசு, தமது சொந்த ஊரைக்கொண்டு அடையாளப் படுத்தப்பட்டார் (காண்க 2:23).*

***வசனம் 72. மறுபடியும்*** *ஒருமுறை பேதுரு கர்த்தரை* ***மறுதலித்தார்*** *மற்றும் இம்முறை அவர் அதை* ***ஆணையிட்டு செய்தார்.*** *அவர் - இயேசுவைப் பெயர்சொல்லிக்கூட அழைக்காமல் -* ***அந்த மனுஷனை நான் அறியேன்*** *என்று கூறியபோது அவர், விரோத உணர்வின் சொல்விளக்கத்தைப் பயன்படுத்தினார். பேதுரு தாம் இயேசுவின் சீஷராயிருந்ததை மறுதலித்தது மட்டுமின்றி, இயேசுவை யார் என்றே தெரியாது என்றும் உரிமைகோரினார். பேதுருவின் ஆணை என்ன என்பதை மத்தேயு சுவிசேஷம் குறிப்பிடுவதில்லை.*

***வசனம் 73.*** *வேலைக்காரப் பெண்ணைப் பேதுரு எதிர்கொண்ட இந்த நிகழ்விற்கும், அவரது கடைசி மறுதலிப்புக்கும் இடையில் ஒரு மணி நேரம் கடந்திருந்தது (லூக்கா 22:59). அருகில் நின்றிருந்தவர்களில் சிலர், நடந்தது என்ன என்பதை உற்றுக்கவனித்து,* ***பேதுரு இயேசுவின் சீஷர்களில் ஒருவரா*** *அல்லவா என்று முடிவு செய்ய முயற்சித்தனர். அவரது பேச்சின்*

*காரணமாக அவர் சீஷர்களில் ஒருவர்தாம் என்று அவர்கள் நம்பி இணங்கினர். அங்கே நின்றவர்கள் அவரிடத்தில்* **மெய்யாகவே நீயும் அவர்களில் ஒருவன்; உன் பேச்சு உன்னை வெளிப்படுத்துகிறது** *என்று கூறினர். அவரது பேச்சு முறையைக் கொண்டு அவர் கலிலேயர் என்பதை அவர்களால் கூற முடிந்தது (மாற்கு 14:70).*

*பழைய ஏற்பாட்டின் காலங்களில்கூட, இஸ்ரவேல் மக்கள் தாங்கள் வாழ்ந்திருந்த பகுதிகளின் அடிப்படையில் வேறுபட்ட உச்சரிப்புகளைக் கொண்டிருந்தனர் (நியாயாதிபதிகள் 12:1-6). முதல் நூற்றாண்டுக் காலத்தின்போது, யூதேயாவில் (தெற்கில்) வாழ்ந்தவர்களுக்கும் கலிலேயாவில் (வடக்கில்) வாழ்ந்தவர்களுக்கும் இடையில் முதன்மையாக வேறுபாடுகள் இருந்தன.*

***வசனம் 74.*** *கடைசிக் குற்றச்சாட்டிற்குப் பதிலுரையாகப் பேதுரு,* **அந்த மனுஷனை அறியேன் என்று கூறி சபிக்கவும் சத்தியம்பண்ணவும் தொடங்கினார்.** *அவர் தாம் உண்மையைக் கூறவில்லை என்றால், தமக்குத்தாமே தேவனிடத்தில் இருந்து சாபம் வரும் என்று கூறினார் (காண்க ரூத் 1:17; 1 சாமுவேல் 3:17; 14:44; 20:13; 25:22). அவர் தமது உரிமை கோருதலுக்குக் கூடுதலான ஆணைகளை இட்டார் (காண்க 26:72). மறுப்பும் ஆணைகளும் ஒன்றாகக் கொண்டு வரப்படும்போது அவைகள் மூன்று மறுதலிப்புகளில் ஒன்றாக ஆகின்றன. பேதுரு மூன்றாம் முறை மறுதலித்த போது,* **உடனே சேவல் கூவிற்று.** *கர்த்தர் முன்னுரைத்தது போலவே இது நடந்தது (26:34).*[24]

***வசனம் 75.*** **சேவல்** *கூவியபின்பு, "கர்த்தர் திரும்பி, பேதுருவை நோக்கிப்பார்த்தார்" (லூக்கா 22:61). அது என்ன ஒரு பார்வையாக இருந்திருக்க வேண்டும்! அதன் பின்பு* **பேதுரு, இயேசு தன்னிடத்தில் சொன்ன வசனத்தை நினைத்துக்கொண்டு,** *தாம் செய்திருந்ததை உணர்ந்தறிந்தார். ஆழ்ந்த வருத்தத்தினால் நிறைந்தவராக* **அவர், வெளியே போய், மனங்கசந்து அழுதார்** *(காண்க 2 கொரிந்தியர் 7:10).*

### ✧✧✧✧✧ *பாடங்கள்* ✧✧✧✧✧

## பேதுருவின் வீழ்ச்சியும் திரும்புதலும் *(26:69-75)*

*நம்மில் பலர் பேதுருவுக்கு உறவுபடக்கூடும். அவர் தூண்டுதலுக்கு ஆட்டபட்டவராக, பிறர் விஷயங்களில் தலையிடுபவராக, துடுக்குத்தனம் கொண்டவராக, பலவீனமானவராக இருந்தார். வேறு எவரும் இவ்வளவு அதிகம் உயர்ந்து மற்றும் இவ்வளவு தாழ்வாக இறங்கியதில்லை. கர்த்தருடன் அவ்வளவு நெருக்கமாக இருந்துகூட அவரை எவ்வாறு ஒருவரால் மறுதலிக்க முடிந்தது? அவரை விழச்செய்த அதை விஷயம் நம்மையும் விழச்செய்யக் கூடும்.*

*பேதுருவின் வீழ்ச்சிப் படிகள்.* *பேதுரு, தாம் எவ்வளவு பலவீனமாக இருந்தார் என்று அறியவில்லை (14:22-31; 16:21-23; 26:30-35; யோவான் 18:10, 11). அவர் சோதனைக்கு ஆளாகாதபடி ஜெபிக்க வேண்டிய நேரத்தில்*

உறங்கிக் கொண்டிருந்தார் (26:36-46), அவர் இயேசுவுக்காக ஜெபித்த சகோதரர்கள் மத்தியில் இருக்க வேண்டிய நேரத்தில், தூரத்தில் பின்தொடர்ந்து கொண்டிருந்தார் (26:58), மற்றும் அவர் யோவானும் தாமும் ஒருவரை ஒருவர் ஆதரித்திருக்கும்படி அவரிடம் சென்றிருக்க வேண்டிய நேரத்தில், விரோதிகளுடன் அமர்ந்திருந்தார் (லூக்கா 22:55). தமது மிகத்தாழ்வான இடத்தில் அவர் கர்த்தரை மறுதலித்து, தம்மீது சாபங்களை வருவித்து ஆணையிட்டார் (26:69-75).

*பேதுருவின் மனந்திரும்புதல் படிகள்.* இயேசுவின் பார்வை ஒன்றினால் பேதுரு கடிந்துகொள்ளப் பட்டபோது, அவர் பேசியிருந்த வார்த்தைகளை (லூக்கா 22:61) பேதுரு நினைத்தார். பேதுரு கசப்புணர்வு நிறைந்தவராகி (லூக்கா 22:62) உண்மையாகவே மனந்திரும்பினார் (யோவான் 21:15-19). அவர் மரணபரியந்தம் உண்மையுள்ளவராக இருந்தார் (காண்க யோவான் 21:18, 19). ரோமாபுரியில் பேதுரு சிலுவையில் அறையப்பட்டு மரித்தார் என்று பலமான பாரம்பரியம் ஒன்று கூறுகிறது.[25] அவர் தமது கர்த்தர் போன்று சிலுவையில் அறையப்படத் தாம் தகுதியற்றவர் என்று நினைத்தபடியால், தம்மைத் தலைகீழாகச் சிலுவையில் அறையும்படி கேட்டுக்கொண்டார் என்று கூறப்படுகிறது.[26]

பலமான கிறிஸ்தவர்கள் கூட இடறக்கூடும், ஆனால் நாம் விழத்தேவையில்லை. பிற்பாடு பேதுரு, சபையின் நடத்துனர் என்ற வகையில், கிறிஸ்தவர்கள் வளரவும் இடறுதலைத் தவிர்க்கவும் வழிகாட்டுதல் களை எழுதினார் (2 பேதுரு 1:5-11).

---

குறிப்புகள்

[1]ரோமப் போர்ச்சேவகர்கள் இயேசுவை யூத அதிகாரிகளிடத்தில் கொண்டு வந்தனர் என்ற உண்மை. திகைப்புக்கு உரியதாக இருக்கக் கூடாது. இதற்கு இணையான ஒரு செயலைப் பவுலின் விஷயத்தில் காண முடியும், அவர் கிலவுதியு லூசியா என்ற ரோம சேனாதிபதியினால் யூதர்களின் சனதெரீன் சங்கத்தாரிடத்தில் கேள்வி கேட்கப்படும்படி பவுலை ஒப்புவித்தார் (நடபடிகள் 22:30). [2]அன்னா அல்ல, காய்பாதாம், ரோம ஆளுநரான பிலாத்துவுக்கு முன்பாக இயேசுவுக்கு எதிராகக் குற்றச்சாட்டைக் கொண்டுவரும் அதிகாரம் கொண்டிருந்தார். [3]Mishnah *Sanhedrin* 1.1, 4, 5. [4]Ibid., 1.6. [5]Ibid., 4.3. [6]Ibid., 4.1. [7]Ibid., 11.2; *Middoth* 5.4. இருப்பினும், சனதெரீன் சங்கத்தார் கூடும் இடம் இந்த வேளைக்கு முன்னதாக தேவாலய உச்சிப்பகுதிக்கு வெளியே ஒரு இடத்திற்கு மாற்றப்பட்டிருக்கலாம். இன்னும் அதிகமான தகவல்களுக்கு, பின்வரும் புத்தகத்தில் காணவும்: Bruce Corley, "Trial of Jesus," in *Dictionary of Jesus and the Gospels*, ed. Joel B. Green and Scot McKnight (Downers Grove, Ill.: InterVarsity Press, 1992), 851. [8]Mishnah *Sanhedrin* 4.1. [9]Ibid., 3.6; 5.3, 4. [10]Ibid., 4.1.

[11]இவ்வசனத்தில் (*aulē*) கிரேக்க வார்த்தை, அந்த அரன்மனையை அல்ல, ஆனால் "முற்றம்" என்பதைக் குறிக்கிறது (26:3ன் மீதான விளக்கங்களைக் காணவும்). [12]காண்க Talmud *Abodah Zarah* 8b. [13]Leon Morris, *The Gospel according to Matthew*, Pillar Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1992), 681. [14]Ibid., 683. [15]காண்க Mishnah *Shebuoth* 4.3. [16]இயேசுவின் இவ்வார்தைகளை லூக்கா, சனதெரீன் சங்கத்தார் யாவரும் கூடியிருந்த காலை வேளையில் நடந்த விசாரணையின் சந்தப்பப் பொருளில்

*வைத்தார் (லுக்கா 22:66-71). இவைகள் அவரது இரவு விசாரணையில் இருந்து திரும்பக் கூறப்பட்டவைகளாக இருக்கக் சாத்தியக்கூறு உள்ளது. காலை வேளையில் விசாரணை ஒன்றை வைத்ததன் மூலமாக யூதத்தலைவர்கள், சட்டவிரோதமான இரவு விசாரணை அலுவலகரீதியானது என்று கண்டறிய முயற்சி செய்தனர்.* [17]Donald A. Hagner, *Matthew 14—28,* Word Biblical Commentary, vol. 33B (Dallas: Word Books, 1995), 801. [18]Jack P. Lewis, *The Gospel According to Matthew,* Part 2, The Living Word Commentary (Austin, Tex.: Sweet Publishing Co., 1976), 153. [19]Mishnah *Sanhedrin* 7.5. [20]Ibid.

[21]Morris, 687. [22]*மாற்கு 14:30ம் வசனம், சேவல் "இருமுறை" கூவும் முன் பேதுரு இயேசுவை மும்முறை மறுதலிப்பார் என்று கூறுகிறது.* [23]*மாற்கு 14:68ல் சில கிரேக்கக் கையெழுத்துப் பிரதிகளில் "மற்றும் ஒரு சேவல் கூவிற்று" - அதாவது முதல் முறைகூவிற்று - என்றுள்ளது.* (Bruce M. Metzger, *A Textual Commentary on the Greek New Testament,* 2d ed. [Stuttgart: German Bible Society, 1994], 97.) [24]*மீண்டும் ஒருமுறை மாற்கு, சேவல் "இருமுறை" கூவிற்று என்று அறிவித்தார் (மாற்கு 14:72).* [25]Eusebius *Ecclesiastical History* 2.25. [26]Alexander Walker, trans., "The Acts of Peter and Paul," in *Ante-Nicene Fathers*, ed. Alexander Roberts and James Donaldson, rev. A. Cleveland Coxe (n.p.: Christian Literature Publishing Co., 1886; reprint, Peabody, Mass.: Hendrickson Publishers, 1994), 8:484.